# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண் 192/2015**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | .. | **பாப்பாத்தி(எ) ராமாத்தாள்** | மதம் | .. | **இந்து** |
| தந்தை / கணவர் பெயர் | .. | **பெரியண்ணன்** | தொழில் | .. | **கூலி வேலை** |
| வயது | .. | 67 | நாள் | .. | 21.03.2024 |
| கிராமம் | .. | **வைகுந்தம்** | | | |
| வட்டம் | .. | **சங்ககிரி** | | | |

2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21-ஆம் நாள் வியாழக்கிழமை திருமதி. பாப்பாத்தி(எ)ராமாத்தாள் க/பெ. பெரியண்ணன் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1969-ஆம் ஆண்டின் 44-வது ஏற்பாட்டின்படி திரு.இரா.ராதாகிருஷ்ணன், பி.எ.,பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சங்ககிரி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

<u>வாதிகள் தரப்பு 1 ஆம் சாட்சியின் முதல் விசாரணை</u>

நான் இவ்வழக்கில் 1ம் வாதி ஆவேன். நான் இவ்வழக்கில் வாதிகள் தரப்பு 1ஆம் சாட்சி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். சாட்சிய நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு நன்கு தெரியும். அந்த விபரங்கள் என்னால் சொல்லப்பட்டவைதான். எனது சாட்சியத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

1) 06.09.1985 தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணம் உண்மை நகல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், வைகுந்தம் கிராம பட்டா எண் 1308க்கான இணைய வழி நகல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) 04.07.2009 தேதியிட்ட வீட்டு வரி ரசீது அசல் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) 05.06.2014 தேதியிட்ட மின் கட்டண ரசீது அசல் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

...2

5) 27.09.2001 தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணம் உண்மை நகல் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6) 18.03.2015 தேதியிட்ட வீட்டு வரி ரசீது அசல் **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7) 28.02.2015 தேதியிட்ட மின் கட்டண ரசீது அசல் **வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

1ம் பிரதிவாதி ஆஜரில்லை. 1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

R RADHAKRISHNAN

Digitally signed by R RADHAKRISHNAN
Date: 2024.03.21 17:25:24 +0530

ஒப்பம்/பாப்பாத்தி (எ) ராமாத்தாள்

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.